செய்தி வெளியீடு எண். 216 நாள். 21.04.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை சார்பாக குடிநீர் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை சார்பாக குடிநீர் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் தலைமையில் இன்று (21.04.2017) நடைபெற்றது.

இவ்ஆய்வின் போது பொன்னேரி, அம்பத்தூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி மற்றும பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் நிலவும் குடிநீர் தொடர்பான அனைத்து கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடம் தெரிவித்தனர். சட்டமன்ற உறுப்பினர்களின் பகுதிகளில் ஏற்படும் குடிநீர் தேவைகளும், அவற்றிற்க்கு செய்யபட வேண்டிய மாற்று ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைபடி திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 526 கிராம ஊராட்சிகள், 10 பேராட்சிகள், 5 நகராட்சிகள் பகுதிகளில் இருக்கும் குடிநீர் தொடர்பாகவும் மற்ற துறைகளின் வளர்ச்சிக் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. கிராம பகுதிகளில் குடிநீர் வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். குடிநீரின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். தண்ணீரின் மூலம் தொற்று நோய் போன்றவைகள் பரவாமல் இருக்க அவற்றை காய்ச்சி அருந்துவதற்க்கு மக்களை அறிவுறுத்த வேண்டும். அனைத்து பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை, எவ்வித தோய்வின்றி கண்காணிக்க வேண்டும். ஏதேனும் குடிநீர் அவசர தேவைகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய தயார் நிலையில் இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் சுறும் புகார்களை பதிவு செய்து அவற்றை உடனுக்குடன் சரி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் ஊராட்சி ஒன்றியங்களில் கையிருப்பில் வைத்துள்ள மின் மோட்டர்கள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் பழுதடைந்திருந்தால் அவற்றை உடனடியாக சரி செய்யபட வேண்டும். இப்போது குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வது மிகவும் அவசியம். திட்ட பணிகள் நிறைவேற்றுவதில் ஏதேனும் தடைகள் ஏற்பட்டடால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கவளத்திற்க்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலாளர் பொதுப்பணித்துறை திரு.எஸ்.கே. பிரபாகர்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.வி.அலெக்சாண்டர் (அம்பத்தூர்), திரு.பி.எம்.நரசிம்மன் (திருத்தணி), திரு.டி.ஏ.ஏழுமலை(பூவிருந்தவல்லி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), திருவள்ளூர்-காஞ்சிபுரம் ஆவின் கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ச.சா.குமார், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~